M

# இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2018

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.15 மணி

**வணிகவியல்**

மதிப்பெண்கள்: 45

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** **10×1=10**

1) நாட்டின் பொருளாதாரத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாதவை
   அ) தொழில்துறை உற்பத்தி ஆ) ஏற்றுமதி
   இ) வேலைவாய்ப்பு ஈ) மேற்கூறிய அனைத்தும்
2) வெளிநாட்டில் இருந்து சரக்குகள் வாங்கப்படுவது ............. என அழைக்கப்படும்.
   அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி
   இ) மறுஏற்றுமதி ஈ) மீண்டும் ஏற்றுமதி
3) வழங்கல் வழியில் உள்ள இடைநிலையர் யார்?
   அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர்
   இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்
4) சில்லறை வியாபாரிகள் ............. அளவில் பொருட்களை வைத்திருப்பர்.
   அ) சிறிய ஆ) பெரிய இ) நடுத்தர ஈ) அளவான
5) உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ............. எனப்படும்.
   அ) உள்நாட்டு வியாபாரம் ஆ) ஏற்றுமதி
   இ) மறுஏற்றுமதி வியாபாரம் ஈ) இணைவினை
6) சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ............. எனப்படும்.
   அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி
   இ) மறுஏற்றுமதி வியாபாரம் ஈ) பன்னாட்டு வியாபாரம்
7) கப்பல் தலைவரால் சரக்கு பெற்று கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது
   அ) அனுப்புகை இரசீது ஆ) கப்பல் இரசீது
   இ) கப்பல் துணைத்தலைவர் இரசீது ஈ) வாணிகத் தூதுவர் இடாப்பு
8) உலக வங்கி அமைந்திருப்பது
   அ) வாஷிங்டன் DC ஆ) நியூயார்க்
   இ) டோக்கியோ ஈ) ஹாங்காங்
9) செலுத்தல் சமநிலை உள்ளடக்கியது
   அ) நடப்பு கணக்கு ஆ) முதல் கணக்கு
   இ) பெறுதல் செலுத்தல் கணக்கு
   ஈ) நடப்பு கணக்கு மற்றும் முதல் கணக்கு
10) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது
   அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

## பகுதி - II

குறிப்பு: எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 11-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும். **4×2=8**

11) திரு. ஆகாஷ் என்பவர் தான் நடத்தி வரும் பின்னலாடை தொழிற்சாலைக்குத் தேவையான பஞ்சினை வெளிநாட்டில் இருந்து வாங்குகிறார். இது எவ்வகை வியாபாரத்திற்கு எடுத்துக்காட்டு?
12) இறக்குமதி என்றால் என்ன?
13) மடங்குக் கடையின் பொருள் யாது?
14) நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
15) செலுத்தல் சமநிலை - வரையறு.
16) பன்னாட்டு வணிகத்திற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.

## பகுதி - III

குறிப்பு: எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17-ற்கு கட்டாயமாக விடையளிக்கவும். **4×3=12**

17) தமிழ்நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளை பட்டியலிடுக.
18) மொத்த வியாபாரம் என்றால் என்ன?
19) வணிக முகவர்களின் வகைகள் யாவை?
20) சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விளக்குக.
21) உலக வர்த்தக அமைப்பின் கூட்டமைப்புகளை வரிசைப்படுத்துக.
22) மூலதனக் கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?

## பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **3×5=15**

23) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்கள் யாவை?

**(அல்லது)**

வழங்கல் வழியினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

24) துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஏற்றுமதி வணிகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

25) உள்நாட்டு வணிகத்திற்கும், பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

**(அல்லது)**

நுகர்வோர்களுக்கு சில்லறை வியாபாரிகள் ஆற்றிடும் சேவைகள் யாவை?

----------